பொருளடக்கம்

❄

குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21

1 ஷைத்தான் குறித்த எச்சரிக்கை 23

2 பாதுகாப்புக் கோரும் வாசக அமைப்பு 28

3 மனிதருக்கு ஷைத்தான் செய்யும் சூழ்ச்சிகள் 40

4 ஷைத்தானையும் அவனது கேட்டையும்
இழுத்து வரும் காரியங்கள் 57

5 குர்ஆனை ஓதத் துவங்கும் முன் பாதுகாவல் கோருவதனால்
விளையும் பலன்கள் 64

6 பாதுகாவல் கோருவதால் அனைத்து கூடாதச்
செயல்களிலிருந்தும் பாதுகாப்பு கிடைக்கிறது;
அதனால் சந்தேகங்களையும் ஆசைகளையும்
தடுக்க இயலும் 69

1

ஷைத்தான் குறித்த எச்சரிக்கை

❄

அல்லாஹ் கூறுகிறான்:

خُذِ الْعَفْوَ وَأْمُرْ بِالْعُرْفِ وَأَعْرِضْ عَنِ الْجَاهِلِينَ وَإِمَّا يَنْزَغَنَّكَ مِنَ الشَّيْطَانِ نَزْغٌ فَاسْتَعِذْ بِاللَّهِ إِنَّهُ سَمِيعٌ عَلِيمٌ وَإِمَّا يَنْزَغَنَّكَ مِنَ الشَّيْطَانِ نَزْغٌ فَاسْتَعِذْ بِاللَّهِ إِنَّهُ سَمِيعٌ عَلِيمٌ

(நபியே!) மன்னிப்பைக் கைக்கொள்வீராக. நன்மையைக் கடைப்பிடிக்குமாறு மக்களை ஏவுவீராக. மேலும் அறிவீனர்களைப் புறக்கணிப்பீராக. ஷைத்தானிடமிருந்து ஏதேனும் தீண்டுதல் உமக்கு ஏற்படுமானால்[1] அப்போது அல்லாஹ்விடமே பாதுகாப்புத் தேடுவீராக.[2] நிச்சயமாக அவன் மிகவும் செவியேற்

---

1 (வசனத்தின் மூலத்தில் ஆளப்பட்டுள்ள) 'நஸ்கு' (தீண்டுதல்) என்பது ஷைத்தானிடமிருந்து ஏற்படும் 'வஸ்வஸா' எனும் ஊசலாட்டமாகும். அஸ்ஸஜ்ஜாஜ் அவர்கள் கூறுவது: மனிதனிடமிருந்து உருவாகும் 'நஸ்கு' என்பது மிகக் குறைந்த அளவு அசைவாகும். ஷைத்தானிடமிருந்து ஏற்படும் 'நஸ்கு' என்பது மிகக் குறைந்த அளவு ஊசலாட்டமாகும். (தஃப்ஸீருல் பஙவீ) 'நஸ்கு' என்பது ஊசலாட்டமும் மனதின் பேச்சுமாகும் என அஸ்ஸுத்தீ கூறுகிறார். (ஸாது மசீர்) தஃப்ஸீர் இப்னு கஸீரில் இடம் பெறுவதாவது: மூடத்தனமாக நடந்துகொள்பவரை மனம் பொறுத்து மன்னிக்கவிடாமல் ஷைத்தான் உன்னைத் தடுத்து ஷைத்தானால் உனக்குக் கோபம் ஏற்படுமென்றால் அப்போது அவனது உணர்ச்சி வசப்படுத்தலில் இருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடு என்பது இதன் கருத்தாகும்.

2 குர்துபீ ﵀ கூறுகிறார்கள்: அதிலிருந்து காப்பாற்றப்படுவதை அல்லாஹ்விடம் வேண்டுவீராக என்பது கருத்து. இங்கு அல்லாஹ்விடம் தஞ்சமடைவது கொண்டும் அவனிடம் பாதுகாவல் கோருவது கொண்டும் ஷைத்தானின் ஊசலாட்டத்தில் இருந்து தற்காத்துக்கொள்ள வேண்டுமென அல்லாஹுத் தஅலா கட்டளையிடுகிறான்... நஸ்கு என்பதன் அசல் கருத்து சீர்கெடுத்தல் என்பதாகும். இதன்படி 'நஸக பைனனா' என்று சொல்லப்படுவதன் கருத்து,

2

பாதுகாப்புக் கோரும் வாசக அமைப்பு

❄

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் அல்லாஹுத் தஆலாவிடம் பாதுகாப்புக் கோரி பின்வருமாறு பிரார்த்திப்பார்கள்:

أَعُوذُ بِاللَّهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ، مِنْ هَمْزِهِ، وَنَفْخِهِ، وَنَفْثِهِ

'அஊதுபல்லாஹி மினஷ்ஷைத்தானிர் ரஜீம் மின் ஹம்ஸிஹி வ நம்ஃப்கிஹி வ நம்ஃப்ஸிஹி'

பொருள்: விரட்டப்பட்ட ஷைத்தானிடமிருந்து அவனுடைய குத்துதல்[5], ஊதுதல்[6], துப்புதல்[7] ஆகியவற்றிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருகிறேன். (அறிவிப்பு: ஜுபைர் இப்னு முத்யிம் ؓ, தப்ரானீ 1569, இர்வாஃ 332)

சில சமயங்களில் நபியவர்கள் சில வார்த்தைகளை அதிகரித்துக் கீழ்வருமாறும் சொல்வார்கள்:

أَعُوذُ بِاللهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنْ الشَّيْطَانِ الرَّجِيمِ مِنْ هَمْزِهِ وَنَفْخِهِ وَنَفْثِهِ

'அஊது பில்லாஹிஸ் ஸமீஇல் அலீமி மினஷ் ஷைத்தானிர் ரஜீம் மின் ஹம்ஸிஹி வ நம்ஃப்கிஹி வ நம்ஃப்ஸிஹி'

---

5 ஷைத்தானின் குத்துதல் (ஹம்ஸு) என்பது அவனால் ஏற்படும் மனநோய் ஆகும். (நூல்: அந்நிஹாயா, அல்முஅஜுமுல் வஸீத்)

6 ஷைத்தானின் ஊதுதல் (நம்ஃப்கு) என்பது அவனது தற்பெருமையாகும். (நூல்: அந்நிஹாயா)

7 ஷைத்தானின் (நம்ஃப்ஸு) துப்புதல் என்பது கவிதையாகும். (நூல்: அந்நிஹாயா) மோசமான கவிதைதான் இந்த வார்த்தை மூலம் குறிப்பிடப்படுகிறது. ஏனெனில், إِنَّ مِنَ الشِّعْرِ حِكْمَةً கவிதையிலும் ஞானம் (ஹிக்மத்) உண்டு என நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள். (அறிவிப்பு: உபை இப்னு கஅப் ؓ, புகாரீ 6145)

3

மனிதருக்கு ஷைத்தான் செய்யும் சூழ்ச்சிகள்

❄

1. இப்லீஸ் தனது படையினரை அனுப்புவது, அவர்களின் கெட்ட செயல்களை விசாரிப்பது

إِنَّ إِبْلِيسَ يَضَعُ عَرْشَهُ عَلَى الْمَاءِ ثُمَّ يَبْعَثُ سَرَايَاهُ فَأَدْنَاهُمْ مِنْهُ مَنْزِلَةً أَعْظَمُهُمْ فِتْنَةً يَجِيءُ أَحَدُهُمْ فَيَقُولُ فَعَلْتُ كَذَا وَكَذَا فَيَقُولُ مَا صَنَعْتَ شَيْئًا قَالَ ثُمَّ يَجِيءُ أَحَدُهُمْ فَيَقُولُ مَا تَرَكْتُهُ حَتَّى فَرَّقْتُ بَيْنَهُ وَبَيْنَ امْرَأَتِهِ قَالَ فَيُدْنِيهِ مِنْهُ وَيَقُولُ نِعْمَ أَنْتَ

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்: இப்லீஸ் தனது ஆசனத்தை (கடல்)நீரின்மீது அமைக்கிறான். பிறகு தன் பட்டாளங்களை (மக்களிடையே) அனுப்புகிறான். அவர்களில் மிகப் பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகின்ற ஷைத்தான் எவனோ அவனே இப்லீஸிடம் மிக நெருங்கிய அந்தஸ்தைப் பெறுகிறான். அவனிடம் ஷைத்தான் 'இன்னின்ன காரியங்களைச் செய்தேன்' என்று கூறுவான். அப்போது இப்லீஸ், '(சொல்லிக்கொள்ளும் அளவுக்கு) நீ எதையும் செய்யவில்லை' என்று கூறுவான். பிறகு அவர்களில் மற்றொருவன் வந்து, 'நான் ஒரு மனிதனுக்கும் அவனுடைய மனைவிக்கும் இடையே பிரிவை ஏற்படுத்தாமல் அவனை நான் விட்டுவைக்கவில்லை' என்று கூறுவான். அப்போது இப்லீஸ், அவனை அருகில் வரச்செய்து, 'நீதான் சரி(யான ஆள்)' என்று பாராட்டுவான். (அறிவிப்பு: ஜாபிர் ؓ, முஸ்லிம் 2813)

2. தடம்புரளச் செய்வதிலும் வழிகெடுப்பதிலும் ஷைத்தானுடைய தொடர் முயற்சி

விரட்டப்பட்ட இந்த ஷைத்தான் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

قَالَ فَبِعِزَّتِكَ لَأُغْوِيَنَّهُمْ أَجْمَعِينَ إِلَّا عِبَادَكَ مِنْهُمُ الْمُخْلَصِينَ

4

ஷைத்தானையும் அவனது கேட்டையும் இழுத்து வரும் காரியங்கள்

❄

1. மாண்புக்குரியவனான அல்லாஹ்வின் வேதத்தையும் அவனை நினைவுகூர்வதையும் புறக்கணிப்பது

وَمَنْ يَعْشُ عَنْ ذِكْرِ الرَّحْمَنِ نُقَيِّضْ لَهُ شَيْطَانًا فَهُوَ لَهُ قَرِينٌ

எவனொருவன் அர்ரஹ்மானின் நல்லுபதேசத்தை விட்டும் கண்ணை மூடிக்கொள்பவனோ[19] அவனுக்கு நாம் ஒரு ஷைத்தானை ஏற்படுத்திவிடுகிறோம்.[20] (குர்ஆன் 43:36)

وَقَالَ الرَّسُولُ يَا رَبِّ إِنَّ قَوْمِي اتَّخَذُوا هَذَا الْقُرْآنَ مَهْجُورًا

'என்னுடைய இறைவா, நிச்சயமாக என் சமூகத்தார் இந்தக் குர்ஆனை முற்றிலும் புறக்கணித்து ஒதுக்கிவிட்டார்கள்' என்று (நம்) தூதர் கூறுவார். (குர்ஆன் 25:30)

வீட்டினுள் நுழையும்போதும் உணவு உண்ணும்போதும் அல்லாஹ்வை நினைவுகூராதவர் குறித்தும் அவருடன் ஷைத்தான் அதில் பங்கெடுத்துக்கொள்வது குறித்தும் ஜாபிர் ﷺ அவர்கள் அறிவிக்கும் நபிமொழி முன்னர் சென்றுள்ளது.

---

19 அதாவது குருடுபோல் நடந்துகொண்டு புறக்கணிக்கிறான். இதன் மூலவார்த்தையாகிய 'அஷா' என்பது பார்வையில் ஏற்படும் பலவீனமாகும். இங்கு அகப்பார்வையின் பலவீனமே நாடப்படுகிறது. (தஃப்ஸீர் இப்னு கஸீர்)

20 அதாவது ஷைத்தானை அவனுடன் இணைத்து அவன்மீது ஆதிக்கம் செலுத்தும்படி செய்துவிடுவோம். (தஃப்ஸீருல் பஃவீ)

5

குர்ஆனை ஓதத் துவங்கும் முன் பாதுகாவல் கோருவதனால் விளையும் பலன்கள்

❄

குர்ஆனை ஓத ஆரம்பிப்பதற்கு முன் (ஷைத்தானை விட்டுப்) பாதுகாப்புத் தேடுவதற்கு அறிவார்ந்த பலன்கள் பல விதங்களில் உள்ளன. அவை:

முதலாவது: குர்ஆன் நெஞ்சங்களில் உள்ள நோய்களுக்கு நிவாரண மாகும். அத்துடன் ஷைத்தான் நெஞ்சங்களில் ஏற்படுத்தக்கூடிய ஊசலாட்டங்கள், ஆசைகள், கெட்ட விருப்பங்கள் ஆகியவற்றைப் போக்கிவிடக்கூடியதுமாகும். எனவே அது, ஷைத்தான் நெஞ்சங் களில் ஏற்படுத்திய தாக்கங்களுக்கு மருந்தாகும்.

ஆகையால்தான் குர்ஆனை ஓதுபவர், நோயின் மூலப் பொருளை விரட்டிவிட்டு அந்த நோயிலிருந்து இதயத்தைக் காலியாக வைக்க வேண்டுமென்று கட்டளையிடப்படுகிறார். அப்படிச் செய்யும் போது அந்த மருந்து, காலியான வெறும் இடத்தை எதிர்கொண்டு அதில் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்தக் கருத்தில் ஒரு கவிதையடி உள்ளது.

ஆசை
அதை நான்
அறியும் முன்பே
என்னிடம் வந்தது
வெறுமையான எனது
இதயத்தைக் கண்டு
அதில் வலுவாக
இடம்பிடித்தது

இரண்டாவது: தண்ணீர், தாவரத்துக்கு மூலப்பொருளாக இருப்பது போல் குர்ஆன், இதயத்தில் இருக்கும் நல்வழிக்கும் நன்மைக்கும்

6

பாதுகாவல் கோருவதால் அனைத்து கூடாதச் செயல்களிலிருந்தும் பாதுகாப்பு கிடைக்கிறது; அதனால் சந்தேகங்களையும் ஆசைகளையும் தடுக்க இயலும்

❄

விரட்டப்பட்ட ஷைத்தானிடமிருந்து பாதுகாவல் கோருபவர், அல்லாஹ்விடம் காவல் வேண்டி தடைசெய்யப்பட்டத் தீமைகளில் வெளிப்படையான மற்றும் மறைமுகமான அனைத்தையும் விட்டு அவனையே பற்றிக்கொண்டவராவார் என்பதில் சந்தேகமே இல்லை.

அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுபவர், கண்ணியமும் மகத்துவமும் மிக்க அல்லாஹ்விடம் நிராகரிப்பு, இணைவைப்பு, பெருமை, அகந்தை, நயவஞ்சகம், பொய், முகத்துதி மற்றும் அல்லாஹ்வைக் கோபப்படுத்துகின்ற அனைத்தை விட்டும் காப்பாற்றப்பட வேண்டுமென்று வேண்டுகிறார். எனினும் உளத்தூய்மையும் உண்மையும் தேவைப்படும். உண்மை மற்றும் உளத்தூய்மை இருக்கும் அளவுக்கே அடியான் இந்தத் தடுக்கப்பட்ட தீமைகளை விட்டு விலகுவதற்கு நல்லுதவி செய்யப்படுவான்.

'மஸாயிபுல் இன்ஸான்' எனும் நூலில் (பக்:16) கூறப்பட்டிருப்பதாவது: ஷைத்தானைவிட்டுப் பாதுகாவல் கோருவதன் நோக்கம், தடைசெய்யப்பட்ட தீமைகள் அனைத்தைவிட்டும் பாதுகாப்புத் தேடுவதுதான். இந்தத் தடைசெய்யப்பட்ட தீமைகள் என்பவை நம்பிக்கைதொடர்பானவற்றிலும் உள்ளன. உடல் உறுப்புகளால் செய்யப்படும் செயல்களிலும் உள்ளன. நம்பிக்கை தொடர்பானதைப் பார்ப்போமானால் ஒரு நபிமொழியில்,

وَتَفْتَرِقُ أُمَّتِي عَلَى ثَلَاثٍ وَسَبْعِينَ فِرْقَةً